# நவம்பர் – 27 – செவ்வாய்

**புனித மக்சிமுஸ்**

**“நீங்கள் ஏமாறதவாறு பார்த்துக்கொள்ளுங்கள்: ஏனெனில் பலர் என் பெயரை வைத்துக்கொண்டு வந்து, ‘நானே அவர்’ என்றும், ‘காலம் நெருங்கி வந்துவிட்டது’ என்றும் கூறுவார்கள்: அவர்கள் பின்னே போகாதீர்கள்”. *லூக். 21:8***

## முதல் வாசகம் : திருவெளிப்பாடு 14 : 14 - 19

சகோதர சகோதரிகளே! பின்பு ஒரு வெண் மேகத்தைக் கண்டேன். அதன்மீது மானிட மகனைப்போன்ற ஒருவர் வீற்றிருந்தார். அவரது தலையில் பொன்முடியும்இ கையில் கூர்மையான அரிவாளும் காணப்பட்டன.மற்றொரு வானதூதர் கோவிலிருந்து வெளியே வந்து, மேகத்தின்மீது வீற்றிருந்தவரை நோக்கி, ”உமது அரிவாளை எடுத்து அறுவடை செய்யும் ஏனெனில் அறுவடைக் காலம் வந்துவிட்டது. மண்ணுலகம் என்னும் பயிர் முற்றிவிட்டது” என்று உரத்தகுரலில் கத்தினார்.உடனே மேகத்தின்மீது வீற்றிருந்தவர் மண்ணுலகெங்கும் தமது அரிவாளை வீசி அறுவடை செய்தார். மற்றொரு வானதூதரும் விண்ணகத்தில் உள்ள கோவிலிருந்து வெளியே வந்தார். அவரிடமும் கூர்மையான அரிவாள் ஒன்று இருந்தது.நெருப்பின்மேல் அதிகாரம் கொண்டிருந்த இன்னுமொரு வானதூதர் பலிபீடத்திலிருந்து வெளியே வந்தார். அவர் கூர்மையான அரிவாளை வைத்திருந்தவரிடம், ”உமது கூர்மையான அரிவாளை எடுத்து மண்ணுலகின் திராட்சைக் குலைகளை அறுத்துச் சேர்த்திடும் ஏனெனில் திராட்சை கனிந்துவிட்டது” என்று உரத்தகுரலில் கூறினார். ஆகவே அந்த வானதூதர் மண்ணுலகின்மீது தம் அரிவாளை வீசி மண்ணுலகின் திராட்சைக் குலைகளை அறுத்துச் சேர்த்தார். கடவுளின் சீற்றம் என்னும் பெரிய பிழிவுக்குழியில் அவற்றைப் போட்டார்.

**பதில்பாடல் :** மண்ணுலகிற்கு நீதித் தீர்ப்பு வழங்க ஆண்டவர் வருகிறார்.

## நற்செய்தி : லூக்கா 21 : 5 - 11

அக்காலத்தில் கோவிலைப் பற்றிச் சிலர் பேசிக்கொண்டிருந்தனர். கவின்மிகு கற்களாலும், நேர்ச்சைப் பொருள்களாலும் கோவில் அழகுபடுத்தப்பட்டிருக்கிறது என்று சிலர் பேசிக்கொண்டிருந்தனர். இயேசு, ”இவற்றையெல்லாம் பார்க்கிறீர்கள் அல்லவா? ஒரு காலம் வரும் அப்போது கற்கள் ஒன்றின்மேல் ஒன்று இராதபடி இவையெல்லாம் இடிக்கப்படும்” என்றார்.அவர்கள் இயேசுவிடம், ”போதகரே, நீர் கூறியவை எப்போது நிகழும்? இவை நிகழப்போகும் காலத்திற்கான அறிகுறி என்ன?” என்றுகேட்டார்கள். அதற்கு அவர், ”நீங்கள் ஏமாறாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள் ஏனெனில் பலர் என்பெயரை வைத்துக்கொண்டு வந்து, ”நானே அவர்” என்றும், ”காலம் நெருங்கிவந்துவிட்டது” என்றும் கூறுவார்கள் அவர்கள் பின்னே போகாதீர்கள். ஆனால் போர் முழக்கங்களையும். குழப்பங்களையும்பற்றிக் கேள்விப்படும்போது திகிலுறாதீர்கள் ஏனெனில் இவை முதலில் நிகழத்தான் வேண்டும். ஆனால் உடனே முடிவுவராது” என்றார்.மேலும் அவர் அவர்களிடம் தொடர்ந்து கூறியது : ”நாட்டை எதிர்த்து நாடும், அரசை எதிர்த்து அரசும் எழும்.பெரிய நிலநடுக்கங்களும் பல இடங்களில் பஞ்சமும், கொள்ளைநோயும் ஏற்படும் அச்சுறுத்தக் கூடிய பெரிய அடையாளங்களும் வானில் தோன்றும்“ என்றார்.

**தியானம் :** இன்றைய இறைவார்த்தைகள் நம்மை இந்த மண்ணுலகம் தனது பயணத்தின் இறுதிக்கட்டத்தை நெருங்கிவிட்டதை நமக்கு நினைவுபடுத்தி, அதற்காக நம்மைத் தயார்செய்ய அழைப்பு விடுக்கின்றன. இன்றைய முதலாம் வாசகம் இறுதிக்காலத்தில் நிகழவிருப்பனவற்றை இறைவனின் வெளிப்பாடாகவும், நமக்கு முன்னெச்சரிக்கையாகவும் தரப்பட்டுள்ளன. ஆனால், இன்றைய நற்செய்தி இறுதி நாட்களின் அத்தகைய கொடூரத்தின் மத்தியிலும் நாம் எவ்வாறு உறுதியாக நிலைத்து நிற்கமுடியும் என்பதையும், கடவுளின் செயற்பாடுகளுக்கும், அவற்றை ஒத்தன போலவை காட்சிதரக்கூடிய பகைவனான சாத்தானின் செயற்பாடு களுக்குமிடையே நாம் சிக்கித்த தவித்துவிடாது நமது உறுதியான விசுவாசத்தின் வாயிலாக நம்மைக் காப்பாற்றிக்கொள்ள நமக்குக் கற்றுத்தருகின்றன. ஆங்காங்கே நடைபெறும் பல இயற்கை அனர்த்தங்கள், போர் முழக்கங்கள் நம்மைப் பலவகையிலும் அச்சுறுத்துவது உண்மையே. ஆயினும் இறைமகன் இயேசுவின் அறிவுரைகளின்படி நாம் திகிலுற வேண்டிய அவசியமே இல்லை.இவைதாம் இயற்கை அனர்த்தங்களையும், போர் முழக்கங்களையும்விட நாம் அஞ்ச வேண்டியவையும், அடையாளம் காண வேண்டியவையுமாகும். இறைவனின் தூயஆவி நம்மைப் பாதுகாத்து, இறைவனின் பாதையில் நம்மைத் தொடர்ந்து வழிநடத்த வேண்டுவோமாக.